www.padippakam.com



# களம் பல கண்ட யாழ் கோட்டை

## பகுதி: மூன்று

## ஆங்கிலேயர் ஆட்சி

நீலவண்ணன்

### I

### 27, செப்டெம்பர் 1795

ஆங்கிலேயக் கேர்ணல் பீற்றர் றெயினர்ஸ் ஸ்ருவார்ட் தலைமையில் கப்பற்படைத் திரளொன்று பருத்தித்துறையில் இறங்கியது. வெகு இலகுவாகத் திருகோணமலை பிரடெரிக் கோட்டையையும், மட்டக்களப்புக் கோட்டையையும் கைப்பற்றிக் கொண்ட மகிழ்வோடும், ஆணவத்தோடும் ஸ்ருவார்ட்டின் படை பருத்தித்துறையில் இறங்கி அணிவகுத்து, யாழ்ப்பாணக் கோட்டையை நோக்கி முன்னேறியது. 28, செப்டெம்பர், 1795 ஆம் ஆண்டு, யாழ்ப்பாணக் கோட்டை ஆங்கிலேயப் படையால் முற்றுகையிடப்பட்டது. கேர்னல் ஸ்ருவார்ட், கோட்டைக்குள் இருப்போரைச் சரணடையுமாறு செய்தி அனுப்பினான்.

ஒல்லாந்த கம்மாந்தராக அவ்வேளை யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்த கம்மாந்தர் றாகெட் (Raket) என்பவனால் எதுவும் செய்ய முடியவில்லை. சரணடைவதைத் தவிர வேறுவழியில்லை கிழக்குக் கரையோரக் கோட்டைகள் அனைத்தும் ஆங்கிலேயரிடம் சரணடைந்த நிலையில் யாழ்ப்பாணக் கோட்டையக் காப்பற்றுவதென்பது பயனற்றதென றாகெட் எண்ணினான். கோட்டைக்குள் இருந்த 39 ஒல்லாந்தரும், 98 இந்தியச் சிப்பாய்களும் (Sepays) வெள்ளைக்கொடி ஏந்தி வெளிவந்து சரணடைந்தனர்.

அவர்கள் வரிசையாக வெளிவந்தனர். வெளியில் வரும்போது கம்மாந்தர் றாகெட்டிற்கு, அவனது முன்னோன் கொமுசாறிவன் ஹூன்ஸ், சரணடைந்த போர்த்துக்கேயருக்குச் செய்த நடத்தைகள் நினைவு வந்திருக்கும். அனைத்துச் சொத்துக்களையும் பறிமுதல் செய்து, முழு நிர்வாணமாக்கிப் பரிசோதித்து, போர்த்துக்கேயரை வன் ஹூன்ஸ் கப்பலேற்றி அனுப்பி வைத்தான். ஆங்கிலேயர் அவ்வாறு செய்யவில்லை. ஒல்லாந்தர் தமது ஆயுதங்களை ஸ்ருவார்ட் முன் குவித்தனர். ஒல்லாந்த உயர் இராணுவ அதிகாரிகள் மட்டும் தம் அரை வாள்களை வைத்திருக்க அனுமதிக்கப்பட்டனர். அவர்களது தனிப்பட்ட பொருட்களை எடுத்துச்செல்ல ஸ்ருவார்ட் அனுமதித்தான். ஆனால் பொதுச் சொத்துக்கள், துப்பாக்கிகள், களஞ்சியப் பொருட்கள், காகிதங்கள் என்பவற்றை எடுத்துச்செல்ல அனுமதிக்கவில்லை. சரணடைந்த ஒல்லாந்தர் தம்மைக் கொழும்புக்கு அனுப்பிவைக்குமாறு கோரிய போதிலும், கேர்ணல் ஸ்ருவார்ட் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களை யுத்தக் கைதிகளாக இந்தியாவிற்கு அனுப்பிவைத்தான்.

யாழ்ப்பாணக் கோட்டை ஆங்கிலேயர் வசமாகியது 14 பெப்ரவரி. 1796 ஆம் ஆண்டு ஆங்கிலேயரிடம் ஒல்லாந்தரின் கொழும்புக்கோட்டையும் சரணடைந்தது. கேர்ணல் ஜேம்ஸ் ஸ்ருவார்ட், திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, காலி ஆகிய பிரதேசங்களுக்கு கவர்னராக நியமிக்கப்பட்டான். மக்களது நம்பிக்கையைப் பெறும் நோக்கமாக மதக்கட்டுப்பாட்டை இவன் தளர்த்திவிட்டான். முதற்கட்டமாக, கத்தோலிக்க குருமார் தமது சமயப் பணியைத் தொடரலாமெனவும், மக்கள் தாம் விரும்பிய மதத்தை அனுட்டிக்கலாமெனவும் ஸ்ருவார்ட் சட்டத்தைத் தளர்த்தினான். எனினும், வருமானம் ஈட்டுவதற்கு உதவிய எச்சட்டத்தையும் ஆங்கிலேயர் தளர்த்தவில்லை.

யாழ்ப்பாணக் கோட்டை, யாழ்ப்பாண வரி சேகரிப்புப் பிராந்தியத்தின் நிர்வாக மையமாக மாறியது. யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி ஆகிய பகுதிகள் இந்த வரி சேகரிப்புப் பிராந்தியத்திலமைந்தன. சென்னையிலிருந்து வரி சேகரிப்பு உத்தியோகத்தர்கள் கொண்டு வரப்பட்டனர். அவர்கள் இந்தியர்கள்; அவர்கள் கோட்டைக்குள் 'கலெக்டர் ஒபிஸ்' ஒன்றைக் கச்சேரி என்ற பெயரில் அமைத்தனர். 'கச்சேரி' என்பது ஹிந்திச் சொல்லாகும். அமில்தார் (வரி வசூலிப்பவர்), கொத்வால் (பொலிஸ்), குமாஸ்தா (லிகிதர்) என்ற பதவிகளைச் சென்னையிலிருந்து இங்கு வந்த உத்தியோகத்தர்களே வகித்தனர். சிப்பாய்களாகப் போத்துக்கேயர் படையிலும், ஒல்லாந்தர் படையிலும் வேலை பார்த்த இந்தியர்கள், ஆங்கிலேயர் காலத்தில் வரி வசூலிக்கும் உத்தியோகத்தர்களாக யாழ்ப்பாணத்திற்கு வந்தனர். மதராசி வரி வசூலிப்போர் தம் எதேச்சதிகாரப் போக்கில் நடந்து கொண்டதால், பின்னர் இவர்களிடமிருந்து பொறுப்பு மீள எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஆங்கிலேய நிர்வாகிகள் மக்கள் மீது பல்வேறு வரிகளை விதித்தனர். மீன்வரி, உப்பு வரி, சாராய வரி, கள் வரி, தலை வரி எனப் பல வரிகள்; ஒரு கட்டத்தில், 1, செப்டம்பர் 1796 இல், தென்னை வரியும் விதித்தனர். ஒவ்வொரு தென்னைக்கும் வருடத்திற்கு ஒரு வெள்ளிப்பணம் வரியாகச் செலுத்துமாறு மக்களைக் கேட்டனர். மக்களது எதிர்ப்பால் 1797, மார்ச் மாதத்தில் இந்த வரி நீக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கோட்டையில் ஆங்கிலேயரின் கொடி பறந்த கால வேளைகளில் நிகழ்ந்த சம்பவங்கள் பலவகையாயினும், அவற்றில் முக்கியமான சிலவற்றை நோக்குவோம். ஆங்கிலேயரின் ஒன்றரை நூற்றாண்டாட்சியில் அடிமைத்தனமாக வாழ்ந்து மக்கள் பழகிவிட்டனர்.



யாழ்க் கோட்டையினுள் அமைந்த மைதானத்திலிருந்து வடக்கே நோக்கியபோது தெரிந்த கோட்டையின் உள்ளமைப்பு. (ஸ்ரெயிகர் என்பவரின் வரைபு – 1710)

யாழ்ப்பாணத்தின் கோட்டையின் தளபதியாக கேர்ணல் பார்பெற்ற (Barbet) என்பவன் பொறுப்பேற்றான். (1796) ஒல்லாந்தரிடமிருந்து கையேற்ற பல தேவாலயங்கள் ஆராதனையில்லாது கைவிடப்பட்டன. சுண்டுக்குழித் தேவாலயமும் அவற்றில் ஒன்றாகும். இந்தத் தேவாலயத்தை கேர்னல் பார்பெற் தனது ஆட்டுப் பட்டியை அடைப்பதற்கான ஆட்டுக் கொட்டிலாகப் பயன்படுத்தினான் என அறியக் கிடக்கிறது. 1801-ஆம் ஆண்டு, டிசம்பர் 20-ம் திகதி வரை கிறிஸ்தியன் தாவீதுப் பாதிரியார் இத் தேவாலயத்தில் ஆராதனை நடாத்தும் வரை இது ஆட்டுக் கொட்டிலாக விளங்கியது.

ஆங்கிலேயர் காலத்தில் இலங்கை முழுவதற்கும் ஒரு தேசாதிபதி நிர்வாகத்தைக் கவனித்து வந்தார். இலங்கை மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு அரசாங்க ஏசண்டர் நியமிக்கப்பட்டார். வடமாகாணத்திற்கு முதன்முதல் ஏசண்டராக நியமிக்கப்பட்டவர் மேற்சொன்ன கேர்ணல் பார்பெற் ஆவார். 1801-ம் ஆண்டு பதவியேற்ற இவர் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து நிர்வாகத்தைக் கவனித்தார். 1804-ம் ஆண்டளவில் கோட்டை மாளிகையை விட்டு வெளியேறி, யாழ்ப்பாணக் கச்சேரி வளவான பழைய பூங்காவில் தனக்கென வீடு ஒன்றினை அமைத்துக் குடியேறினார். கோட்டை மாளிகையில் அவருக்கு அடுத்த தரத்திலிருந்த மேயர் ஒருவன் குடிபுகுந்தான். அந்த வருடமே யாழ்ப்பாணக் கோட்டை தனது முக்கிய நிர்வாக மையம் என்ற அந்தஸ்தை இழந்தது.

1798-ம் ஆண்டு கண்டி மன்னன் ராஜசிங்கன் மரணமடைந்தான். அரசுரிமை போட்டி ஏற்பட்டது. கண்ணசாமி என்பவன் விக்கிரமசிங்கன் என்ற பெயரோடு மன்னனானான். அரசுரிமையாளனான முத்துச்சாமி என்பவன் தனது உறவினருடன் கொழும்புக்குத் தப்பியோடி, ஆங்கிலேயரிடம் சரண்புகுந்தான். ஆங்கிலேயர் முத்துச்சாமியையும் அவனோடு சேர்ந்தவர்களையும் யாழ்ப்பாணக் கோட்டைக்கு அனுப்பி அங்கு ஒரு மாளிகையில் தங்க வைத்திருதனர்.

1805-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. அதனால், யாழ்ப்பாணக் கோட்டைக்குள் சேகரித்து வைத்திருந்த 1000 மூடை அரிசி, பெரியகடைக்கு அனுப்பப்பட்டு ஒரு மூடை 10 இறைசாலுக்கு விற்கப்பட்டது.

1806-ம் ஆண்டு இலங்கையின் சேதாதிபதியான நோத் என்பவன் யாழ்ப்பாணத்திற்கு ஒரு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு வந்தான். அவனும் அவனது பரிவாரமும் கோட்டை மாளிகையில் தங்கியிருந்தனர். அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ள 1 தண்டிகைகளும், 100 தண்டிகைக் காவிகளும், 100 கூலியாட்களும் தேவைப்பட்டனர்.

1807-ஆம் ஆண்டு இலங்கையில் கவர்னராகவிருந்த சேர் தோமஸ் மெயிற்வாண்ட் என்பான் 'பசார் வரி' (Bazzar Tax) என்ற வியாபார வரி ஒன்றினை அறிமுகப்படுத்தினான். யாழ்ப்பாணத்தின் நிர்வாகிகளும் அதனை நடைமுறைப்படுத்தினர். சந்தைகள், கடைகள் என்பவற்றில் விற்கப்படுகின்ற பொருட்களுக்கும், கொள்முதல் செய்யப்படுகின்ற பொருட்களுக்கும் வரி விதிக்கப்பட்டது. தானியங்களுக்கு இரு சதவீத வரியும், ஏனைய பொருட்களுக்கு மூன்று சதவீத வரியும் விதிக்கப்பட்டன. இவை இறையல் (ஒரு சிலிங்கும் 6 பென்சும்), செப்புப்பணம் (1 பெனி), சல்லி, அரைச்சல்லி முதலான நாணயங்களாக வசூலிக்கப்பட்டன.

1816-ம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிராகக் கண்டியில் கலகம் ஏற்பட்டது. அரசுக்கு விரோதமாகப் பலர் கிளர்ச்சி செய்தனர். அவ்வாறு கிளர்ச்சி செய்த EPLTP" நிலாமையையும், சில புத்தகுருமாரையும் கைதுசெய்த ஆங்கிலேயர், அவர்களை யாழ்ப்பாணக் கோட்டையில் சிறை வைத்தனர். 1817-ம் ஆண்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

1864-ம் ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டைக்குச் சுப்ரீம் கோர்ட் நீதியரசரைப் பார்த்துப் பேசிச் செல்வதற்காக மல்லாகம், சாவகச்சேரி ஆகிய இருவிடத்து பொலிஸ் நீதிபதிகள் வந்திருந்தனர். அவர்கள் நீதியரசரைச் சந்தித்துவிட்டு, கோச் வண்டியில் மல்லாகம் நோக்கி வரும்போது, அவர்கள் எதிரில் வண்ணை சிவன் கோயிலிலிருந்து சுவாமி ஊர்வலம் வந்து கொண்டிருந்தார். வீதியில் சனத்திரள் குவிந்து வந்தது. தீப்பந்தங்கள், தீவட்டிகள் ஒளியில் சுவாமி ஊர்வலம் நிகழ்ந்தது. அந்த ஊர்வலத்தை அலட்சியப் படுத்தியபடி, சனக் கும்பலைப் பிளந்தபடி பொலிஸ் நீதிபதிகள் வந்த கோச்சு வண்டி செல்ல முயன்றது. வண்டியோட்டி சவுக்கினை விசிறிக் குதிரைகளை நடத்த முயன்றபோது, சவுக்கின் முடிச்சுக் கயிறு ஊர்வலம் வந்துகொண்டிருந்த ஒருவரின் திறந்தமேனியில் சுளீரெனப் பட்டது. அவ்வளவுதான் சாரதியும், கோச்சுவண்டியில் அமர்ந்திருந்த ஆங்கிலப் பொலிசு நீதிபதிகளும் கீழே இழுக்கப்பட்டு நையப்புடைக்கப் பட்டனர். பின்னர் யாழ். மாவட்ட நீதிபதி மோர்பியு தலையிட்டுச் சமாதானம் செய்துவைக்க நேர்ந்தது.

1872-ல் ஆங்கிலேயர் பெரியதொரு 'சேர்ச்சை' பறங்கித் தெருவில் கட்டிக்கொண்டனர். அதன் பின்னர் கோட்டைக்குள்ளிருந்த தேவாலயத்தின் முக்கியத்துவம் குன்றிப்போனது. எனினும், கோட்டைக்குள்ளிருந்த தேவாலயத்தின் மீது ஒல்லாந்தர் எக்காலத்தும் தமதென உரிமை கோரக்கூடாது என்பதற்காக, 1892-ல் கொழும்பிலியங்கிய வூல்வொண்டால் கொன்சிஸ்ரரி (Wolvendal Consistory) யினருக்கு ரூபா ஆறாயிரம் வழங்கி உரிமையை வாங்கிக் கொண்டனர். அத்துடன் ரூபா எழுபந்தைந்து செலுத்தி அதனுள்ளிருந்த அனைத்துத் தளபாடங்களையும் விலைக்கு வாங்கித் தமதுரிமையாக்கிக்கொண்டனர்.

(தொடரும்)

படிப்பகம்